ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி




சமய - சமூக - இலக்கிய வெளியீடு

30/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

## மே - 2013

மலர் - 45 இதழ் - 04


- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்

- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்

- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்

- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்

- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்

- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  திரு/மட். மறை மாவட்டம்

- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் – 44
  மட்டக்களப்பு.

- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.





| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு | 01 |
| வாழ்க்கைக்கு | 02 |
| நாகரிகமறியா விலங்கு | 04 |
| மாணவர் பக்கம் | 05 |
| அருட்தந்தை பீ.ஏ. ஜோசப் | 06 |
| கல்வியில் முதுமாணி | 07 |
| நவீன நரிக் கதைகள் | 08 |
| நம்பிக்கையில்லாத வாழ்வு | 10 |
| கருந்தேள் | 12 |
| தொண்டனின் சில | 13 |
| இதுதான் வாழ்க்கையா | 16 |
| இலக்கிய வீதி | 19 |
| கடுகுக் கதை | 20 |
| கலைக்கோட்டன் | 21 |
| நம்பிக்கையாய் இரு | 22 |
| புனிதர்களை அறிவோம் | 23 |
| தமிழில் கிறிஸ்தவ | 25 |
| விவிலியம் கற்போம் | 27 |
| அறிவை வளர்ப்போம் | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 30/=
ஆண்டு சந்தா : 500/=
(தபாற் செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...!

உழைப்பு ஒருவனை மனிதனாக, மாண்புள்ளவனாக, நேர்மையாளனாக உயர வழி வகுக்கின்றது. நாம் உழைப்பாளர்களின் தினத்தை இந்த மாதத்திலே கொண்டாடுகின்றோம். உழவர் தொடக்கம் இயந்திர ஊழியர் வரை உழைப்புக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

தூய பவுலடிகளார் 2ம் தெசலோனிக்கருக்கு எழுதிய திருமுகத்திலே அழகாகக் குறிப்பிடும் வார்த்தை, “உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது''. (2 தெச 3:10) உழைக்கும் எண்ணம் ஒருவனுக்கு அடிப்படையிலேயே உருவாக வேண்டும். உழைப்பு கடவுளால் தரப்பட்ட கொடை என்பதை உணர்ந்து அதை நல்ல முறையிலே நற்செயலுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

இம்மாதம் நாம் சிறப்பாக, சமுதாயத்தின் அடிமட்டத்திலே நமக்காக ஒவ்வொரு நாளும் எந்தவித பிரதிபலனும் எதிர்பாராது உழைக்கும் ஒவ்வொருவரையும் நன்றியோடு நினைவுகூரும் மாதமாகும். நம்முடைய அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்யப் பலருடைய சிறு உழைப்பும் நமக்குத் தேவைப்படுகின்றது.

இந்த உழைப்பாளர்கள் தினம் ஏதோ ஒரு மேல்மட்ட வர்க்கத்தோடு சேர்ந்து கொண்டாடும் ஓர் ஆடம்பர விழாவாக அமையாமல் கொத்தடிமைகள், சிறுவர் தொழிலாளர்கள், முதலாளிகளின் முரண்பாடுகளில் சிக்குண்டவர்கள், கூலித் தொழிலாளர்கள் இவர்களின் உரிமைக்காய், விடுதலைக்காய் குரல்கொடுக்கும் நாளாகும்.

மற்றவர்களுடைய பணம், பொருள், உடைமைகளை மட்டும் சுரண்டுவது பாவம் அன்று; பிறருடைய உழைப்பைச் சுரண்டுவதும் மிகப்பெரிய பாவந்தான். தனி மனிதனுடைய சுயநலத்திற்காக பிறருடைய உழைப்பு சுரண்டப்படும் நிலை அடியோடு ஒழிய வேண்டும். அனைவரும் சுதந்திரமாகவும் உரிமையுடனும் தங்கள் உழைப்பை மேற்கொள்ள உதவவேண்டும். உழைப்பாளர்களின் பாதுகாவலராக அன்னையாம் திருச்சபை புனித யோசேப்பை நினைவுகூருகிறது. இம்மாதத்தின் முதல் நாளிலேயே இப்புனிதரின் விழாவைக் கொண்டாடுகிறது. அத்துடன் உழைக்கும் ஒவ்வொருவருக்காகவும் செபிக்க நம்மை அழைக்கின்றது.

மே மாதம் மரியன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம். இம்மாதத்திலே நாம் மரியன்னைக்கு விழா எடுக்கின்றோம். மரியாள் எலிசபெத்தைச் சந்தித்த நாளை நினைவுகூருகின்றோம். பேராயர் புல்டன் ஜே சின்,

“இது பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டின் சந்திப்பு,

இரு கருவறைகளின் சந்திப்பு'' என்கிறார்.

இது வெறும் இருவரின் சந்திப்பு அன்று, இரு யுகங்களின் சந்திப்பு. பிறருக்கு உதவி செய்யும் சந்திப்பு. மரியாளின் சந்திப்பு வாழ்வைக் கொடுத்தது. உறவை வளர்த்தது. அன்பைப் பெற்றது. எனது சந்திப்பு எதைக் கொடுக்கும்?

- ஆசிரியர் -

இறைவாக்கு

“நீங்கள் உண்டாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்யுங்கள்”

(1 கொரி 10:31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாழ்க்கைக்கு...



எதிர்கொள்ளுவோம்.....!

06

முயற்சிகளோடு ஓடுகிறவனுக்கு கால்கள் சிறகாகும். பறக்காதவனுக்கு சிறகும் சுமையாகும்.

போட்டியாளர்கள் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். புள்ளி வைத்து அழகான வட்டம் வரையும் போட்டி. உலகப் புகழ்பெற்ற ஓவியர் மைக்கல் ஆஞ்சலோவும் தன் இளம் வயதில் இதில் கலந்துகொண்டார். பலர் வந்து கம்பி, கருவிகள் என்று பயன்படுத்தி அளவுகளாய்ப் பார்த்துப் புள்ளி வைத்து வட்டமிட்டுக் காட்டினர். மைக்கல் ஆஞ்சலோ வெறுமனே போனார், எந்தவிதக் கருவியின் உதவியும் இல்லாமல் அழகான வட்டத்தை அப்படியே வரைந்தார். வட்டம் சரியாக இருந்தது. முதல் பரிசு அவருக்கே! பரிசு வழங்கும்போது "என்ன ரகசியம்" என்று கேட்டனர். அவரோ, "ஒன்றும் பெரிய ரகசியமில்லை, 200 நாட்களாக இடைவிடாமல் ஒவ்வொருநாளும் எட்டு மணி நேரப் பயிற்சிதான் இது" என்றார்.

1501வது தடவைதான் மின்சார பல்பு கண்டு பிடிக்கப்பட்டது என்பதே தாமஸ் அல்வா எடிசனின் வரலாறு. 1500 தடவையில் நிறுத்தி இருந்தாலும் இன்று நாம் மின்சார பல்பைப் பார்த்திருக்க முடியாது.

'அறிவு மங்கிப்போனவன் நீ' என்று பாடசாலையில் இருந்து துரத்தப் பட்ட டார்வின்தான், பரிணாமத் தத்துவத்தைக் கண்டு பிடித்தவர்.

வாழ்க்கையில், பல காரியங்களில் ஈடுபடுகின்றோம். நாம் ஈடுபடும் எல்லாக் காரியங்களும் நமக்குச் சாதகமாக அமையவேண்டும் என்றுதான் விரும்புகிறோம். பரீட்சையில் சித்தியடைய எண்ணி தினமும் பாடுபட்டுப் படிக்கின்றோம்.

Fr. ரமேஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எதிர்பார்த்த புள்ளி வராததினால் அதிர்ந்து போகின்றோம். இதனால் படிப்பு கசக்கிறது; பள்ளி வெறுக்கிறது.

முயற்சி செய்கிறோம், தக்க பலன் கிடைக்காததினால் உடைந்து போகிறது வாழ்க்கை; உறைந்து போகிறது காலம். ஒட்டுமொத்தத்தில் மனம் நொந்து வீழ்கிறோம். இதை மாற்ற என்ன வழி...?
உண்டு நண்பா உண்டு.


மண்ணின் பொறுமைதான் மலை
கரியின் பொறுமைதான் வைரம்
தாயின் பொறுமைதான் நீ/நான்
4 ஆண்டு பொறுமைதான்
பெப்ரவரியின் 1 நாள் உயர்வு.

'ஐயோ என்னால் தாங்க முடியவில்லையே' என்ற அலறல் ஒவ்வோர் உள்ளத்திலும் கேட்கிறது. சிரித்துக்கொண்டே அவற்றைச் சகிக்கும் பழக்கம் சிலருக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது.

காலையில் கண்விழித்திருந்து இரவு படுக்கைக்குப் போகும் வரை துன்பங்களையே சந்திப்பவர்களும் உண்டு. இதில் சகிப்புத் தன்மையை எப்படி வரவழைப்பது...? ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், வாழ்க்கையில் வரும் துன்பங்கள் கடலில் விழும் கல்லைப் போன்றது. விழுந்த கல் கடலைக் கலக்கலாம். ஆனால், மறுகணமே அது மாறிவிடும். கல்லால் கடல் உடைவதில்லை. ஒன்று நடந்துதான் தீரும் என்றால் அதில் கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது என்பதை உணர்ந்துவிட்டால் எதையும் தாங்கும் இதயம் உருவாகிவிடும்.

மேல் கிளையிலே நாகம், கீழ் கிளையிலே வேங்கை. நடுக்கிளையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதுதான் வாழ்க்கை. கை வலிக்கும் ~ சகித்துக்கொள் நண்பா...! நேரம் ஆக ஆக வேங்கை விடைபெற்றுக்கொள்ளும்.

சகிப்புத் தன்மையின் முடிவு மகிழ்ச்சியான வெற்றியாக மட்டுமே இருக்கும். ■



## அரச தொலைக்காட்சி விருது பெற்ற நமது கலைஞர்கள்...

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்ப்பிரிவில் தயாரிப்பாளராகப் பணிபுரியும் மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. மோசேஸ் அவர்கள் **"புதுமைப் பெண்"** என்ற தொலைக்காட்சி நாடக நெறியாளுகைக்காக விருதினையும் **"மண்வாசனை"** என்ற கல்வி கலாசார நிகழ்ச்சித் தயாரிப்புக்காக மற்றொரு விருதினையும் பெற்றுக்கொண்டார்.

2012ம் ஆண்டுக்கான அரச தொலைக்காட்சி விருது வழங்கும் விழாவில் இவ்விருதுகள் வழங்கப்பட்டன. மேலும், அவரது மனைவியும் கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளருமான எம். பகீரதி அவர்களும் தாம் எழுதிய **"இலங்கைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சமூகவியல் பார்வை"** என்ற ஆய்வு நூலுக்காக இவ் விழாவில் விருது பெற்றார். விருதுபெற்ற தம்பதியினருக்குத் தொண்டன் தம் வாழ்த்தினைத் தெரிவிக்கின்றது. அதேவேளை, திரு. மோசேஸ் அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழக மாணவராக இருந்த காலப்பகுதியில் தொண்டன் சஞ்சிகையில் பல்வேறு ஆக்கங்களைப் படைத்தளித்தவர் என்பதை இந்தவேளையில் நாம் நினைவுகூருகிறோம்.



– இன்பம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நாகரிகமறியா விலங்கு

கண. மகேஸ்வரன்

வீதியை அசிங்கப்படுத்துவது
நாய்கள் மட்டுந்தானா....?
நாய்க்குணம் கொண்ட
சில மனிதருமுண்டே!

நாயாவது நன்றி மறவா
ஐந்தறிவு ஜீவி ....

தன்னைப் போசிக்கும் எஜமானுக்கு
நன்றியறிதலுடன் வாலையாட்டி
என்றும் விசுவாசமாயிருக்கும் ...

தருணத்தில் தன்னுயிரீந்து காக்கவும்
தயங்கா மதியுடைப் பிராணி!

ஆறாம் அறிவு பெற்றிருந்தும்
நாகரிகம் தெரியா மனிதனோ.
நாயினும் கேவலமாய் நடப்பதில்
நிறைவு காண்கிறான்!

வீதியைக் கழிவிடமாக்குவதும்
வெற்றிலை குதப்பித் துப்புவதும்
வெற்று மதுக்குப்பியை
வீதியிலே வீசி எறிவதுமென
வீம்பு செய்கிறான்:
பட்டியலிட்டாலும் அடங்காதிவன் செயல்!

சாதியைச் சொல்லி மதத்தைச் சொல்லி
தாழ்வு படுத்துவதும்
இனவெறி தூண்டி இழிவுபடுத்துவதும்
என இவன் செய்கையோ
சொல்லி மாளாப் பெருஞ்சோகம்!

## கவிதைகள் 2

# நட்பு

நட்பு என்பது
எவ்வளவு ஆழமானதோ
அவ்வளவு விஸ்தாரமானது!

உரச உரச ஜொலிக்கும்
வைரம் போல் இதுவும்
பழகப் பழக விசாலிக்கும்!

உறவு என்பதோ அத்தகையதன்று:
சொந்தமும் பந்தமும்
சுயநலத்தின் அஸ்திவாரத்தில்
கட்டப்படும் கோட்டை
கோட்டை போலவே
சூட்சுமங்கள் கொண்டது!

எங்கெங்கு மர்ம அறைகள் உளவோ
எங்கெங்கு பதுங்கு குழிகள் போல்
பங்கர்கள் உள்ளனவோ
எங்கெங்கு ரகசியமாய் வெளியேற
சுரங்கங்கள் உளதோ
ஆழப்புகுந்து அலசிப்பார்த்தாலே
அத்தனையும் புரியும்!

கோட்டை கொத்தளங்களைத்
தகர்ப்பது கடினந்தான்:
ஆழப் பதிந்து அகலக் கிளைபரப்பும்
கேண்மையுடைத்தான
நட்பும் அத்தகையதே!

எவரெவர் எது சொல்லினும்
உண்மை நட்பதனையும்
எளிதில் தகர்க்க முடியாது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கத்தோலிக்க திருமறை

# மாணவர் பக்கம்

க.பொ.த. (உயர்தரம்)

-நில்மினி கஜேந்திரன்-

## கீழைத்தேய நாடான கொரியாவில் திருச்சபை வளர்ச்சி

16ம் நூற்றாண்டின் மத்திய காலத்திலே போர்த்துக்கேய வியாபாரிகளின் வருகையுடன் கிறிஸ்தவமானது ஜப்பானுக்குள் கொண்டுவரப்பட்டதாக பொதுவான கருத்து நிலவுகிறது. எனினும் அண்மைக்காலத்தில் சில ஆராய்ச்சியாளர்கள் இதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஜப்பானில் இருந்ததாகக் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாய் நாகசாகி நகருக்கருகாமையிலுள்ள கியோற்றோ எனுமிடத்திலே விகாரையில் கண்டெடுக்கப்பட்ட பழைய சீன மொழியில் எழுதப்பட்டிருக்கும் புனித மத்தேயு எழுதிய நற்செய்தியையும், மலைப் பொழிவின் விளக்கங்களையும் குறிப்பிடுகின்றனர். இவ் விகாரையானது 603ல் தீயினால் அழிவுக்குள்ளான ஒரு கிறிஸ்தவ கட்டிடத்தின் மேல் 818ல், கட்டப்பட்டுள்ளது. இக்காலத்தில் அதிகமான புத்த விகாரைகள் அழியுண்ட கிறிஸ்தவ ஆலயங்களின் மேலேயே கட்டப்பட்டிருந்தன. ஜப்பானிய ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி நெஸ்தோரிய கிறிஸ்தவ சபையினரே 5ம் நூற்றாண்டளவில் முதல் முதல் கிறிஸ்தவத்தை ஜப்பானுக்குக் கொண்டுவந்துள்ளனர். அக்காலத்தில் கிறிஸ்தவம் “ஒளி வீசும் மதம்” என அழைக்கப்பட்டது.

1549ல் போர்த்துக்கேயரின் வருகையின் பின்பே கத்தோலிக்க கிறிஸ்தவமானது, ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட மதமாகக் காணப்பட்டது. இயேசு சபைக் குருவான புனித பிரான்சிஸ்கு சவேரியாரும், கொஸ்மே தே ரொறெஸ், ஜோண்பேர்னாண் டரஸ் என்பவர்களே ஜப்பானில் கிறிஸ்தவத்தைப் போதிக்க முதலில் வந்தவர்களாவர். ஆரம்பத்தில் ஜப்பானியர்கள் இவர்களை இந்தியர்கள் என்றும் கிறிஸ்தவம் ஒரு புது இந்திய மதமெனவும் எண்ணினர். காரணம் இந்தியாவுக்கும், போர்த்துக்கேயருக்கும் இருந்த உறவு மற்றும் மாலுமிகள் பலர் இந்தியராய் இருந்தமை. பிரான்சிஸ்கு சவேரியாரும் இயேசு சபையினரும் நாகசாக்கி நகரைத் தம் பணித்தளமாய் வைத்துப் பணியை ஆரம்பித்தனர். வெகு விரைவில் மக்களின் ஆதரவினால் 20000இற்கும் அதிகமானவரை மனந்திருப்பி, திருமுழுக்குக் கொடுத்தனர். 1601ல் அதிகமானோர் இங்கு கத்தோலிக்கராயினர். இது அதிக காலம் நீடிக்கவில்லை. கத்தோலிக்கரான ஜப்பானியர் களுக்கு போர்த்துக்கேய கிறிஸ்தவ பெயர்களைக் கொடுத்து மேற்கத்திய பழக்கங்களையும் ஊக்குவித்தனர். இம்முறை ஜப்பானில் சீர்கேட்டை ஏற்படுத்தியதால் இவர்கள் உளவாளிகள் எனும் சந்தேகமும் ஏற்படலாயிற்று.

மன்னர் ஓடாநொபுநாகாவின் ஆட்சியின் கீழ் அரச ஆதரவை அனுபவித்து வந்த இயேசு சபையினர், ஆட்சி மாற்றத்தின் பின்னர் மன்னர் ரொயோரோமி கிடேயோசியின் சந்தேகத்துக்கு ஆளாகினார். தொடர்ந்து தைக்கோசாமா மன்னரின் ஆட்சியில் 1587ல் கிறிஸ்தவர்களுக்கெதிராக வேத கலாபனை ஆரம்பமானது. இது 50 ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது. 1612ல் கத்தோலிக்க மதம் தடைசெய்யப்பட்டது. இதனால் மதபோதகர்கள் நாட்டிலிருந்து விரட்டப்பட்டார்கள். கத்தோலிக்கர்கள் மிகவும் கொடூரமாய்க் கொலைசெய்யப்பட்டார்கள். 1597ல் 26 ஜப்பானிய மதபோதகர்களும், விசுவாசிகளும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டு நாகசாக்கியிலுள்ள ஒரு மலையில் சிலுவையில் அறையப்பட்டு மறைசாட்சிகளாக தங்கள் உயிரைத் தியாகம் செய்தார்கள். எஞ்சியவர்கள் மதத்தை மறுதலிக்க வற்புறுத்தப்பட்டனர். திருச்சிலுவையைக் காலின் கீழ் போட்டு மிதிக்கவும் வற்புறுத்தப்பட்டனர். கிறிஸ்தவம் தளர்வுற்று பௌத்த மதம் தழைத்தோங்கியது.

1856ல் கத்தோலிக்க இயேசு சபை மறைபோதகர்கள் ரியூக் தீவுக்குச் சென்று கிறிஸ்தவத்தை போதித்தனர். 1871ல் ஜப்பானில் மீண்டும் மதச் சுதந்திரம் வழங்கப்பட்டது. இதனால் அனைத்து மதத்தவரும் தங்கவும், →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அருள்தந்தை B.A. ஜோசப் அடிகளார் இறைபதமடைந்தார்.



திருகோணமலை உவர்மலையை பிறப்பிடமாகக் கொண்ட அருட்தந்தை B.A. ஜோசப் அவர்கள் கடந்த ஏப்ரல் திங்கள் இருபத்தி மூன்றாம் நாள் இறைபதமடைந்தார். திரு.திருமதி. பெனடிக்ட் தம்பதியினருக்கு மூத்த மகனாக 1953ம் ஆண்டு பிறந்த இவருக்கு, நான்கு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உள்ளனர். கண்டி, திருச்சி (இந்தியா) போன்ற இடங்களில் தமது குருத்துவக் கல்வியை நிறைவுசெய்த இவர் 1983ம் ஆண்டு ஏப்ரல் 28ம் நாள் காலஞ்சென்ற முன்னாள் ஆயர் L.R. அன்ரனி ஆண்டகை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். உதவிப் பங்குத்தந்தையாக மூதூர், மட்டக்களப்பு, கல்முனை போன்ற இடங்களிலும் பங்குத்தந்தையாக சொறிக்கல்முனை, செங்கலடி, தாழங்குடா, நாவற்குடா, ஆரையம்பதி, சாம்பல்தீவு போன்ற இடங்களிலும் பணியாற்றினார். இவர், 1995 முதல் 1998வரை மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளராக பணியாற்றியவர்.

அருட்தந்தையின் இறுதிச் சடங்குகள் கடந்த ஏப்ரல் 25ம் நாள் உவர்மலை குழந்தைஇயேசு ஆலயத்தில் நடைபெற்றது. தம் பணிவாழ்வை நிறைத்து இறைபதமடைந்த அருட்தந்தை அவர்கள் இறைசன்னிதியில் என்றும் இன்புற்று வாழ இறையருள் இறைஞ்சுகிறோம்.

அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தவர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- தொண்டன் -

மாணவர் பக்கம் →

மதங்களைப் போதிக்கவும் அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் 1872ல் மீண்டும் ஆலயங்கள் கட்டப்பட்டன. இதன் நிமித்தம் பிரான்சிஸ்கன் சபையினரும், டொமினிக்கன் சபையினரும் இவர்களுடன் இணைந்து கொண்டனர். பின்னரும் ஆலயங்கள் தகர்க்கப்பட்டன. எனவே, நாகசாக்கி நகரத்தின் எல்லைகளில் கத்தோலிக்கர்கள் ஒழிந்துகொண்டனர்.

1861ல் புரட்டஸ்தாந்து சபையினர் மீண்டும் ஜப்பானுக்கு வந்தனர். பிறெஸ்பிற்றேரியன் மறை போதகரான டிவி பெத்தூள் மக்கார்த்தி என்பவரே முதலில் ஜப்பானுக்கு வந்தவராவார். இவர் 1861-1862 வரை சீனாவில் தங்கியிருந்தார். 1937ல் ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து வேதாகமச் சங்க அனுசரணையுடன் ஜப்பானிய வேதாகமச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. கிறிஸ்தவ மறைபரப்பாளர் ஜப்பானின் கல்வித் துறையிலும் பெரும் பங்காற்றி இருக்கின்றனர். ஜப்பானியர்களுக்குத் தேவையான தொழில் நுட்பங்களை, கல்வியை வழங்கியமையால் மேற்கத்திய கல்வி முறையை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். கத்தோலிக்க மறை பரப்பாளர்களால் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகள் பிற்காலத்தில் மிக உயர் பல்கலைக் கழகங்களாய் விளங்கின. இவை தேவ ஆலயங்களில் நடைபெற்றமையே கத்தோலிக்கப் பாடசாலைகளின் வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தன.

இவ்வாறு ஜப்பானில் திருச்சபை பல்வேறு வழிகளாலும் வளர்ச்சி கண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்வி முதுமாணிப் பட்டம்

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பிரதி அதிபரும், விசேட பயிற்றப்பட்ட கணித ஆசிரியரும் தொண்டன் சஞ்சிகையின் துணை ஆசிரியருமான திரு. பெஸ்லியோ வாஸ் அவர்கள் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வி முதுமாணிப்பட்டம் (M.ed) பெற்றுள்ளார். இவர் ஏற்கெனவே பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலை இளமாணிப் பட்டமும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் நூலக முதுமாணிப் பட்டமும் (Msc) பெற்றவராவார். கடந்த 9ம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது இது வழங்கப்பட்டது.



மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவிலும் தொண்டன் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் நீண்ட காலமாக இணைந்து பணியாற்றி வருபவர். தொண்டன் சஞ்சிகையில், இலக்கிய மஞ்சரி, தொண்டனின் சில நிமிடங்கள், குறுங்கதை போன்ற பகுதிகளை நீண்ட காலமாகத் தயாரித்து வழங்கி வருகின்றார். அத்துடன் இலங்கை வானொலி தேசிய சேவையிலும் காலையில் ஒலிபரப்பாகிவரும் நற்சிந்தனைகளையும் பல்லாண்டுகளாக அவ்வப்போது வழங்கிவருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. நமது மறைமாவட்ட தொடர்புத்துறைப் பணிகளில் மிகுந்த ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் பங்களிக்கும் நம்மவரின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் நாம் மிகவும் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறோம். அவர் மேலும் வளர்ந்திட, பல்வேறு உயரங்களைத் தொட்டிட இறை ஆசிர் இறைஞ்சி வாழ்த்துகிறோம்.

**தொண்டன் - குடும்பத்தினர் -**

### குறும்(புப்)பா – III

அளவின்றேல் ஆள்வீழ்த்தும் மதுசாரம்
அழகாலே ஆள்வீழ்த்தும் விபசாரம்
விலையாலே வீழ்த்தியினி விளக்காலே வாழென்று
மலையேறிப் போனதடா மின்சாரம்.



– மலர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

■ அ.ச. பாய்வா

# நவீன நரிக் கதைகள்



01

"சபை நடுவே, நீட்டோலை வாசியாம்,
நின்றான் குறிப்பறிய மாட்டாதவனாய்"

> நின்ற நெடு மரங்களைத் தவிர்த்தால், அது ஒரு முதுகெலும்பில்லாத காடு. அந்தக் காட்டில் ஒரு பெரிய நரியொன்று வாழ்ந்துவந்தது. ஏனைய மிருகங்கள் ஏனோ அதனை ஒருவித அருவருப்புடன் ஒதுக்கியே வைத்தன. இதனைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்ட நரி, தான் வாழ்ந்த பகுதியைச் சுற்றி எல்லை யிட்டு அதற்கு ராசா தானே என்று பிரகட னம் செய்தது. அந்தப் பிரகடனத்தைச் சில எருமைகள் தங்கள் முதுகில் எழுதிச் சுமந்துகொண்டு காடெங்கும் திரிந்தன. அத்துடன் வடை விடயத்தில் ஏற்கனவே தான் ஏமாந்துபோன அதே அண்டங்காக்காயிடம் தந்திரமாய் இசை கவன்றதாய்ச் சொல்லிக் கொண்டு ஊளையிடத் தொடங்கியதால், அந்தப் பிராந்தியத்திலிருந்த குயில்களும், கிளிகளும், சிட்டுகளும் அதனைச் சகிக்க முடியாமல் வேறு காட்டை நோக்கிப் பறக்கத் தொடங்கின. பறவை களின் சங்கீதமற்ற காடு சுடுகாடானது. ஆனால், நரி அதனையிட்டுக் கவலை கொள்ளாமல் இன்னும் சில நரிகளையும் சேர்த்துக் கொண்டு ஊளை யிட்டது.

நரி ஒருநாள் நகர்வலம் வரும்போது தனது எல்லைக் கப்பால் கொழுத்த செம்மறி ஆட்டு மந்தையைக் கண்டது. அந்த மந்தையைக் கண்டநாளிலிருந்து நரிக்குத் தூக்கமே வரவில்லை. எப்படியாவது மந்தைக்குள்

## "சாயம் வெளுத்த நரி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஊடுருவ வேண்டுமெனப் பலநாட்கள் திட்டமிட்டு எப்படியோ ஒரு செம்மறியை வளைத்துப் போட்டது.



அமைதியான இந்த மந்தைகளுடன் தான் வாழ விரும்புவதாகவும், தான் மாமிசம் உண்பதில்லையென்றும், காட்டுக் காளானைப் புசித்து ஒரு தபசியைப் போல் வாழ்வதாகவும் சொன்னதை நம்பிய ஆடு, நரி கேட்டுக்கொண்டதற்கிணங்க அதற்கு ஆடு போல் பேசக் கற்றுக் கொடுத்து, ஆட்டுத் தோலொன்றையும் போர்த்துவிட்டு அதனைத் தன் மந்தையிடம் அறிமுகம் செய்து வைத்தது. நரியோ, ஆடுகளின் மடியில் பாலருந்தி, காட்டு மரங்களில் வடியும் ஒருவித மதுவிலும் மாந்தி, சந்தர்ப்பம் கிடைத்த போது ஆட்டுக் குட்டிகளையும் அடித்துச் சாப்பிட்டுத் தந்திரமாய் வாழ்ந்து வந்தது. ருத்திராட்சப் பூனைபோல.

புதிய ஆட்டின் நடத்தை மீது சந்தேகம் கொண்ட சில புத்திசாலி ஆடுகள் உசாராயின. இதனையிட்டு அவை ஏனைய மந்தைகளுக்குப் பலவாறு எடுத்துச் சொல்லியும் பலனளிக்கவில்லை.

இருந்தும், மந்தைகளுக்கேயுரிய அதே மந்தைத்தனம் அதுவெனப் புத்திசாலி ஆடுகள் எண்ணி ஓய்ந்துவிடவில்லை.

புத்திசாலி ஆடுகள் யோசித்தன. தந்திரத்தைத் தந்திரத்தால்தான் வெல்ல வேண்டுமெனத் தீர்மானித்து நரியை அடிக்கடி வெறுப்பேத்திப் பார்த்தன. நரியோ, மசியாது தன் தந்திரங்களால் எப்படியோ அதிலிருந்து தப்பி வந்தது.

ஒருநாள் மந்தைகள் புல்வெளியில் இரைமீட்டுக்கொண்டிருந்த சுபவேளையைத் தேர்ந்தெடுத்த புத்திசாலி ஆடுகள், திடீரென ஓடிவந்து பலமான தம் கொம்புகளால் நரியின் விலாவில் ஓங்கி இடித்தன.

எதிர்பாராத இத்தாக்குதலால் நிலைகுலைந்து போன நரி, தான் பெற்ற பயிற்சிகள், புனைந்த வேடம் என யாவற்றையும் மறந்து வலி தாங்காது தன் நிலை மறந்து, "ஊ....." வென ஊளையிடத் தொடங்கியது.

திகைத்து நின்ற ஆடுகள், வேடங்கலைந்து நின்ற நரியைக் கொன்று விடச் சுற்றி வளைத்தன. ஆனால், புத்திசாலி ஆடுகளோ, "மன்னிப்பு ஒன்றே நாம் ஒருவனுக்கு வழங்கும் அதிகபட்ச தண்டனையாகும். அதுவே, உலகின் அதிசிறந்த ஆயுதமுமாகும். சித்த சுவாதீனமற்ற இந்த மாமிச பட்சணியை மன்னித்து விடுவோம்" என்று சொல்லி நரியை மன்னித்து அனுப்பி வைத்தன.

வென்றிலன் என்றபோதும், சாயம் வெளுத்த நரி, தன் தந்திரங்களை மீண்டும் எப்போ, எப்படி, எங்கு பிரயோகிக்கலாமென்ற யோசனையுடன், கால்களுக்கிடையில் வாலை விட்டவாறு ஓடிக்கொண்டிருந்தது.

அருங்கோடையின் அறிகுறிகள் அந்த நரியின் ஒவ்வொரு அங்க அசைவிலும் தென்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நம்பிக்கையில்லாத வாழ்வு!



*நம்பிக்கை ஆண்டு இது. பல வருடங்களுக்கு முன் நடந்த இந்த உரையாடல் நம்பிக்கை என்றால் என்ன என்பதை நடிக்கு எடுத்துக் காட்டுகின்றது.*

பல்கலைக்கழகப் பேராசிரியர் தனது பாடவேளையில் ஒரு மாணவனிடம் கேட்டார்

:- "தம்பி, நீ ஒரு கிறீஸ்தவன் இல்லையா?"

**மாணவன்** :- "ஆம், ஐயா."

**பேராசிரியர்** :- "அப்போ நீ கடவுளை நம்புகின்றாய்"

**மாணவன்** :- "ஆம்! முற்றுமுழுதாக ஐயா"

**பேராசிரியர்** :- "கடவுள் நல்லவர்தானே?"

**மாணவன்** :- "நிச்சயமாக"

**பேராசிரியர்** :- "கடவுள் சர்வ வல்லமை பொருந்தியவர்"

**மாணவன்** :- "ஆம்"

**பேராசிரியர்** :- "எனது தம்பி புற்றுநோயால் இறந்து போனான். தன்னைச் சுகப்படுத்தச் சொல்லி கடவுளிடம் கெஞ்சினான். ஒன்றும் நடக்கவில்லை. நம்மில் யாராவது நோயுற்றால் அவருக்கு நாம் ஓடிச்சென்று உதவுவோம். ஆனால், கடவுள் அப்படிச் செய்யவில்லையே? அப்படியிருக்க, கடவுள் எப்படி நல்லவராக இருக்க முடியும்? ஆ!"

மாணவன் மௌனமாகிப் போனான்.

**பேராசிரியர்** :- "உன்னால் பதில் சொல்ல முடியவில்லை இல்லையா? சரி நான் முதலிலிருந்து தொடங்குகிறேன். கடவுள் நல்லவர் தானே?



**மாணவன்** :- "ஆம்."

**பேராசிரியர்** :- "சாத்தான் நல்லவனா?"

**மாணவன்** :- "இல்லை."

**பேராசிரியர்** :- "சாத்தான் எங்கிருந்து வந்தவன், அவனைப் படைத்தது யார்?"

**மாணவன்** :- "வந்து...வந்து ... கடவுள்தான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பேராசிரியர் | :- | "அதுசரி! இப்போ சொல்லு தம்பி... இந்த உலகத்தில் கெட்டது என்று ஏதாவது இருக்கிறதா?" |
| மாணவன் | :- | "ஆம்" |
| பேராசிரியர் | :- | "ஆம். கெட்டவை எல்லா இடங்களிலும் இருக்கின்றன.. ஆனால் உலகத்தைப் படைத்தது கடவுள்தானே?" |
| மாணவன் | :- | "ஆம்" |
| பேராசிரியர் | :- | "அப்போ கெட்டவைகளைப் படைத்தது யார்?" மாணவன் பதில் பேசவில்லை |
| பேராசிரியர் | :- | "உலகில் நோய் இருக்கிறதா? சாவு இருக்கிறதா? வெறுப்பு இருக்கிறதா? அசிங்கம் இருக்கிறதா? இவையெல்லாம் இந்த உலகத்தில்தானே இருக்கின்றன?" |
| மாணவன் | :- | "ஆம் ஐயா, இருக்கின்றன." |
| பேராசிரியர் | :- | "அப்படியென்றால் இவற்றையெல்லாம் படைத்தது யார்? மாணவனிடம் பதில் இருக்கவில்லை |
| பேராசிரியர் | :- | "விஞ்ஞானம் சொல்கிறது,உலகத்தைப் புரிந்துகொள்ள மனிதனுக்கு ஐந்து புலன்கள் இருக்கின்றன என்று, சரிதானே! நீ எப்போதாவது கடவுளைப் பார்த்ததுண்டா?" |
| மாணவன் | :- | "இல்லை ஐயா." |
| பேராசிரியர் | :- | "சரி எப்போதாவது கடவுள் பேச நீ கேட்டதுண்டா, சொல் பார்க்கலாம்." |
| மாணவன் | :- | "இல்லை." |
| பேராசிரியர் | :- | "அதைவிடு. எப்போதாவது நீ கடவுளை உருசி பார்த்ததுண்டா? தொட்டதுண்டா? கடவுளின் மணத்தை நுகர்ந்திருக்கிறாயா? மொத்தத்தில் நீ என்றாவது உன் ஐம்புலன்களால் கடவுளை உணர்ந்ததுண்டா, சொல்!" |
| மாணவன் | :- | "இல்லையென்றுதான் நான் கூறவேண்டும்." |
| பேராசிரியர் | :- | "இருந்தும், இப்போதும் நீ கடவுளை நம்புகின்றாய். இல்லையா?" |
| மாணவன் | :- | "ஆம்." |
| பேராசிரியர் | :- | "பார்த்து, பகுப்பாய்ந்து, பரிசோதித்து, ஆய்வுக்குட்படுத்தி, எடுத்துக்காட்டவல்ல விஞ்ஞான முறைமைகள் எல்லாம் நீ சொல்லும் உன்னுடைய கடவுளை இல்லை என்று சொல்லுகின்றது. இதற்கு நீ என்ன பதில் சொல்லப்போகிறாய்?" |
| மாணவன் | :- | "ஒன்றும் சொல்வதற்கில்லை. என்னுடைய நம்பிக்கை மட்டுந்தான் என்னிடம் உள்ளது". |
| பேராசிரியர் | :- | "ம்... நம்பிக்கை! விஞ்ஞானத்திற்குள்ள ஒரு பிரச்சினை அதுதான்" |

மாணவன் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கேட்டான்:

"ஐயா! வெப்பம் என்று ஒன்று உள்ளதா?"

| | | |
|---|---|---|
| பேராசிரியர் | :- | "ஆம்." |
| மாணவன் | :- | "குளிர் போன்று ஏதாவது ஒன்று இருக்கிறதா?" |
| பேராசிரியர் | :- | "ஆம்." |

- மிகுதி அடுத்த இதழில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கருந்தேள்...!



கட்டிலடியில்
கும்மிருட்டு மூலையில்
கரிய பொருளொன்று
சுருண்டு கிடந்தது
மங்கிய ஒளியில்
பல தடவை அவதானித்து
அகற்றிவிட எத்தனித்தேன்
என்னவாயிருக்கும்!
கருவழலைப் பாம்பு
சுருண்டு படுக்கிறதோ!
கரிய பூனையது
கண்மூடித் தூங்குதோ!
கறுத்த ஜட்டியோ
விளங்கவேயில்லை.

கூர்ந்து பார்த்தேன்
தனியார் ரீவியில்
தொலைபேசிக் கதைகேட்டு
நிற்பானே ஒருவன்
அவனின் தலைமுடிபோல்
சிலும்பலாய்த் தெரிகிறது
என்னவாயிருக்கும்...?
உலரந்த தடியொன்றை
உடனெடுத்து வந்தேன்
தட்டித் தட்டி இழுத்தெடுத்தேன்
சிரிப்போ சிரிப்பு
சின்ன மகனின்
கிழிந்துபோன காற்சட்டை
காலால் எற்றி வீசவே
பொறி கலங்கியது
கருந்தேளொன்று
கால்பரப்பி நின்றது
என்கால் விறைத்தது
சுருண்டு விழுந்தேன்
சுழன்று வந்தது
மறுதாக்குதலுக்கு

இப்பொழுது புரிகிறது
ஆழமாக அவதானித்து
பலங்களையும்
பலவீனங்களையும்
பாகுபடுத்திப் பார்க்காமல்
பலப்பரீட்சை நடத்தினால்
இதுவே கதியென்று

கருந்தேளும் கருவழலையும்
பிச்சைதான் எடுக்கவேணும்
இவ்வுலக மனிதர்களிடம்
பேச்சிலும் மூச்சிலும் நஞ்சு
உணர்விலும் உறக்கத்திலும்
சுத்தமான சுயநலம்
ஆழக்குழிபறித்து
அயலானை அதில்புதைத்து
உல்லாசமாய் வாழ
ஆலாய்ப்பறக்கின்ற
அற்பர்கள் பூமியிது
ஆமாம்
அற்பர்கள் பூமியிது...

» பைந்தமிழ்க்குமரன் டேவிட் «

குறும்(புப்)பா – 112

சுட்டெரிக்கும் வெயில் வெந்து போச்சு
கூடொருநாள் மாறும் மழையாச்சு
கொட்டிவிட்ட வார்த்தைகளால் பட்டதுயர் ஆறுமா
கட்டிவிடு கடிவாளம் வாய்க்கு.



~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' நாம் ஒருவரை சந்திக்கிறோம். அவர் எம்மிடம் வந்து, தன் அனுபவங்களை தொண்டன் வாசகர்களிடம் பகிர்ந்துகொள்ள விரும்புவதாகக் கூறினார். ஆனால், அவர் தன்னை 'இன்னார்' என்று வாசகர்களிடம் அறிமுகம் செய்துகொள்ளத் தயாரில்லை. எனவே, தன்னை இனம்காட்ட விரும்பாத நபர் ஒருவரின் பேட்டியினை 'தொண்டன்' இம்முறை உங்களுக்குத் தரவிருக்கிறான். பெயருமில்லை, புகைப்படமும் இல்லை. இவ்வாறான ஒரு செவ்வி 'தொண்டனின் சில நிமிடங்களுக்குப்' புதிது. அவரை 'மிஸ்டர் எக்ஸ்' என்றே எடுத்துக்கொள்வோமே!

'மிஸ்டர் எக்ஸ்' ஓர் அரசாங்கப் பணியாளர். பிரதேச மட்டத்தில் ஓரளவு பிரபல்யமானவரும் கூட. இவருக்குச் சில உள்ளூர் அமைப்புகளுடன் வியாபாரத் தொடர்புகளும் உண்டு. எனவே, சில வெளிநாடுகளுக்குக் கருத்தரங்குகளுக்காகச் செல்லும் வாய்ப்புகளும் அண்மைக்காலமாகக் கிடைக்கத் தொடங்கியிருந்தது. முதல் தடவையாக இந்தோனேஷியாவுக்குச் சென்று வந்திருந்தார். மிக அண்மையில் மலேஷியாவிற்கு அவர் சென்றபோது ஏற்பட்ட அனுபவங்களையே அவர் எம்முடன் பகிர்ந்துகொள்கின்றார். இவர் வெளிநாடு செல்வது இவரது உடன் பணியாளர்களுக்குக்கூட தெரியவருவதில்லை.

இந்தோனேஷியாவிற்குச் சென்றபோது அவருக்கு எவ்வித கஷ்டமான அனுபவங்களும் கிடைக்கவில்லை. அதேபோன்று இலகுவான பயணமாக இருக்கும் என்ற எண்ணத்தில் தான் இம்முறை 'கோலாலம்பூர்' விமான நிலையத்தைச் சென்றடைந்தார். அவருடன் இன்னும் இரண்டு உள்ளூர் நண்பர்களும் உடன்சென்றிருந்தனர். விமான நிலையம் சென்றடைந்தபின் விமான நிலையத்தினுள் சற்றுத் தாமதமாகி விட்டனர்.

அதன் பின்னரே குடிவரவு, குடியகல்வு அதிகாரகளின் கருமபீடத்திற்குச் சென்றுள்ளனர். இதற்கிடையில் இவர்களின் விமானத்தில் வந்த ஏனைய பயணிகள் குடிவரவு, குடியகல்வு கரும பீட விடயங்களை முடித்துவிட்டுச் சென்றுவிட்டிருந்தனர். இவர்கள் மிகவும் பிந்திவிட்டிருந்தனர். இவர்கள் சாதாரண ரீ சேர்ட்டும்,






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கட்டைக் காற்சட்டையும் அணிந்திருந்தனர். முதலில் 'மிஸ்டர் எக்ஸ்' (நம்மவர்) கருமபீடத்தை அடைந்திருந்தார். மலேசியா வந்த காரணத்தை அவரிடம் அதிகாரிகள் வினவினர். அவரும் ஆவணங்களைக் காட்டியுள்ளார்.

"செலவுக்குப் பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா...?"

பணத்தைக் காட்டினார். அவருக்கு மலேசியாவுக்குள் நுழைய அனுமதி கிடைத்துவிட்டது. அவரின் நண்பர்களிடம் காசாக கையில் பணம் இல்லை என்பது 'மிஸ்டர் எக்ஸ்' ற்குத் தெரியும். எனவே, அவர்கள் குடிவரவு–குடிஅகல்வு கருமபீடத்திற்குச் செல்வதற்கு முன் தன்னிடமிருந்த இரண்டரை இலட்சம் ரூபாவையும் இருவரிடமும்

"கைச்செலவுக்கு பணம் இருப்பதாகக் காட்டுங்கள்"

என்று பிரித்துக் கொடுத்துவிட்டார். அவரின் நண்பர் ஒருவர் தன்னிடமிருந்த சிறிய 'பேர்ஸ்' ஒன்றை 'எக்ஸிடம்' கொடுத்துவிட்டு கருமபீடத்திற்குச் சென்றுவிட்டார்கள். இவர் வெளிப்பக்கம் வந்துவிட்டார். இவரிடம் இப்போது இருந்தது ஒரு கையடக்கத் தொலைபேசியும் நண்பரின் பேர்சும், பிரயாணப் பையும்தான்.

சுமார் ஒரு மணித்தியாலம் கடந்து விட்டிருந்தது. நண்பர்கள் இருவரும் வந்தபாடில்லை. உள்ளே சென்று எட்டிப் பார்த்திருக்கின்றார். அவர்களைக் காணவில்லை. அங்கேயிருந்த அதிகாரி சொன்னார்,

"உடனே வெளியே போகலாம்: இல்லையெனில் நீரும் அடைக்கப்படவேண்டியிருக்கும்"

உடனே 'எக்சுக்கு' புரிந்துவிட்டது. கருமபீடத்திற்கு வெளியே வந்துவிட்டார். நண்பரின் 'பேர்சை' திறந்து பார்த்தார். அதில்




இலங்கைப் பணம் ரூபா மூவாயிரம் மட்டும் இருந்தது. அதைமாற்றி ஒரு மலேசியன் 'சிம்கார்ட்' ஒன்றை வாங்கினார். சுமார் பதினெட்டு மணித்தியாலங்கள் விமானநிலையத்துக்குள் இருக்கவேண்டியதாயிற்று. அந்தப் பதினெட்டு மணித்தியாலங்களும் என்ன செய்வதென்று அவருக்குப் புரியவில்லை. மகாநாட்டு ஏற்பாட்டாளர்களில் ஒருவரை தொடர்பு கொண்டபோது மாநாடு ஆரம்பமாகவுள்ளதாகவும், ஒரு நிமிடம் பிந்தினாலும் உள்ளே நுழைய இயலாது; எனவே உள்ளூர் விமானத்தைப் பயன்படுத்தி மாநாடு இடம்பெறும் தீவுக்கு வருமாறு அவர் சொல்லியுள்ளார். நம்மவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ஏனைய இரு நண்பர்களிடமும் பலமுறை தொடர்புகொள்ள முயன்றார், தொடர்பு கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அந்தப் பதினெட்டு மணித்தியாலங்களில் தான் அவருக்குத் தனது கையடக்கத் தொலைபேசியில் என்னென்ன வசதிகள் உண்டு என அறிய வாய்ப்புக் கிடைத்தது. அதிலிருந்த வசதியைப் பயன்படுத்தித்தான் மாநாட்டு ஏற்பாட்டாளருக்கு மின்னஞ்சல் தொடர்பை ஏற்படுத்தியிருந்தார்.

பசி வயிற்றைக் கிள்ளியது. விமானநிலைய வளாகத்திற்குள்ளேயே உணவு விடுதி இருந்தது. அங்கு உணவு வகைகள் பொதி பண்ணப்பட்டுதான் மேசைகளில் பரிமாறப்பட்டன. அம்மேசைகளில் வாடிக்கையாளர்கள் சாப்பிட்டுவிட்டு மீதியாக வைத்திருந்த உடைக்கப்படாத பொதிகள் சிலவும் இருந்தன. வெட்கத்தை பசி வென்றிருந்தது. அங்கு சென்று அவற்றைச் சாப்பிட்டிருக்கின்றார் நம்மவர். உணவு விடுதி ஊழியர்கள், சி.சி.ரி.வி கமரா எல்லாம் அவரை அவதானித்திருக்கக்கூடும், என்றாலும் கொள்வனவு செய்தவர்கள் அவற்றுக்கெல்லாம் பணம் செலுத்தியிருந்ததால் பிரச்சினைகள் உண்டாகவில்லை.

சாப்பிட்ட பிற்பாடு சற்று சோர்வு நீங்கிய நம்மவர் தனது சொந்தப் பேர்சை கிளறிப் பார்த்திருக்கிறார். அதற்குள் அவரது மனைவியின் 'கடன் அட்டை' இருந்துள்ளது. அவரது மனைவி ஒரு வங்கி அதிகாரி. 'கடன் அட்டையை' போட்டுப் பார்த்திருக்கின்றார். தேவையான அளவு பணம் இருந்திருக்கின்றது. அதை எடுத்திருக்கின்றார்.

ஆனால் காலம் கடந்துவிட்டபடியால் அவரால் கருத்தரங்கில் பங்குபற்ற இயல வில்லை. இனி என்ன செய்வது? மலேசியாவை சுற்றிப்பார்த்துவிட்டு கிளம்ப வேண்டியதுதான்.

"உங்கள் நண்பர்களைப் பின்னர் சந்தித்தீர்களா...?" என்று கேட்டோம்.

"இலங்கையில் வைத்துத்தான் சந்தித்தேன்"

"அவர்களுக்கு என்ன நடந்தது...?"

"விமான நிலைய கருமபீடத்தில் இருந்து உள்ளே கொண்டு போய் அடைத்து வைத்திருக்கிறார்கள். அவர்களிடம் உத்தியோக பூர்வ ஆவணங்கள் இருந்தும் நாடு கடத்தப்பட்டார்கள்....."

"ஏன் இப்படிச் செய்தார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா...?"

"மலேசியாவுக்கு ஒவ்வொருநாளும் ஏராளமான வெளிநாட்டவர்கள் வருகின்றார்கள். ஆனால், பெரும்பாலானோர் திரும்பிப் போவ தில்லை. அந்த நாட்டில் சில பகுதிகளில் கலாசார சீரழிவுகள் ஏராளம். இப்படி வருபவர்க ளும் அதில் சிக்கிச் சீரழிந்து, மற்றவர்களையும் சீரழிக்கின்றனர். எனவே, எல்லோரையும் சந்தேகக் கண்ணோடுதான் பாரக்கிறார்கள்".

"உங்கள் அனுபவத்தில் இருந்து தொண்டன் வாசகர்கட்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன...?"

**மிஸ்டர் எக்ஸ் பின்வரும் கருத்துகளைச் சொன்னார்.**

- வெளிநாட்டுப் பிரயாணம் செய்பவர்கள் முறையான, சரியான ஆவணங்களை வைத்திருக்க வேண்டும்.
- அரசாங்க ஊழியர்கள் முறைப்படி அனுமதி, லீவு என்பனவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தொழிலை இழக்க நேரிடும்.
- தேவையான பணம் கைவசமிருக்க வேண்டும். செல்லும் நாட்டில் உள்ளவர்கள் சிலரின் அறிமுகம் இருக்க வேண்டும்.
- தேவையற்ற வெளிநாட்டுப் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

**ஈற்றில் தொண்டனுக்கு நன்றிகூறி அவர் விடைபெற்றுக்கொண்டார்.**

- ஆதியோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இதுதான் வாழ்க்கையா?

ஆலயம் நோக்கி நடந்துகொண்டிருந்த என்னை ஆலய வளவில் ஓடி விளையாடிக்கொண்டிருந்த ஒரு குழந்தையின் மழலைக் கூச்சல் திரும்பிப் பாரக்க வைத்தது. மகிழ்ச்சியுடன் படிகளில் ஏறியும் இறங்கியும் தன்னைப் பிடிக்க வருபவரின் கையில் அகப்படாது தப்பியோடுவதில் மகிழ்ச்சியடைவதையும் பார்க்கச் சிரிப்பு வந்தது. ஒரு பூவைப் பார்த்த உணர்வு ஏற்பட்டது. அவளது சேட்டைகளை இரசித்துக்கொண்டு ஆலயத்தினுள் நுழைந்தேன்.

சிறிது நேரத்தின் பின் ஆலயத்தினுள் அதே மழலைக் குரல் கேட்டது. வயதான பெண்மணி ஒருவர் அவளை ஓடாமல் நிறுத்தப் பகீரதப் பிரயத்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

“எஸ்தர்! இங்க வா, கோயிலுக்குள்ள ஓடித்திரியக் கூடாது. வா வெளிய போவம்”

என அழைத்துச் சென்றார். சில நிமிடங்கள் சென்றதும் ஆலயத்திலிருந்து வெளியேறி வீடு செல்லும் வீதியின் பக்கம் திரும்பிய வேளையில் எதிரே எனக்கு மிக நன்றாகத் தெரிந்த விமலேஸ் வந்தாள். பல நாட்களின் பின் அவளைக் கண்டதால் வழக்கமான குசலம் விசாரித்துவிட்டு,

“என்ன இந்தப்பக்கம்...”

என வினவ, அவள் ஆலய வளவினுள் விளையாடிக்கொண்டிருந்த எஸ்தரைச் சுட்டிக்காட்டி, அவளைப் பாரக்க வந்ததாகத் தெரிவித்தாள்.

“யாரந்தக் குழந்தை...?”

எனக் கேட்ட எனக்குக் கிடைத்த பதிலோ பெருங்கதை யானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**வி**மலேசின் கணவரது தங்கையின் மகள் எஸ்தர், அவளுக்கு நான்கு வயது. இரு வருடங்களுக்கு முன் தாய் நோயுற்று இறந்துவிட்டாள். குழந்தை பிறந்ததிலிருந்து ஆரம்பித்த நோய்தீர செய்யாத வைத்தியமில்லை. இரு வருடங்களாகக் கஷ்டப்பட்டு இறுதியில் இறந்துபோனாள். கணவனோ மாமி, மாமா, குழந்தையுடன் வாழ்ந்து வந்தான். தாயற்ற குறையே தெரியாது வளர்ந்தாள் எஸ்தர். அம்மம் மாவையே அம்மா என அழைத் ததை யாரும் தடுக்கவுமில்லை.

இவ்வாறு ஒரு வருடம் கழிந்தது. மருமகன் கிருஸ்டியின் பெற்றோர் அவருக்கு மறுமணம் செய்து கொடுப்பது பற்றிப் பேசிய போது, கிருஸ்டியோ முடியாதென



மறுத்துவிட்டான். இது சிறிது ஆறு தலாயிருந்தது மாமா மாமிக்கு.

ஆனால், கிருஸ்டியின் இளவயது அவனுக்கு ஒன்றும் வாழ்வு முடிந்து விடவில்லை எனக் காட்டியது. சிறிது பயம் ஏற்பட்டது இப்போது. எத்தனை நாட்களுக்குத் திருமணம் செய்யாது மறுப்பான்...? ஒருவேளை பெற்றோரின் சொல்லுக்குக் கீழ்படிந்து மறுமணம் செய்தால் என்ன செய்வது...? திருமணத்தின்போது கிருஸ்டியின் பெயரில் மாற்றப்பட்ட அவர்களது சொத்துகள் அவன் மறுமணஞ் செய்தால் தமது பேத்திக்குக் கிடைக்காமற் போய்விடுமோ என அஞ்சினர். வரும் புதிய மணமகள் தமது பேத்தியின் சொத்துகளைக் காத்து அவளுக்குக் கொடுப்பாள் என்பது என்ன நிச்சயம்...? இதுபோன்ற சந்தேகங்கள் அவர்களைக் கவலைக்குள்ளாக்கின.

ஒருநாள் வேலைவிட்டு வந்து ஆறுதலாக இருந்த கிருஸ்டியிடம் மெல்ல "தமது பேத்தியின் பெயருக்குச் சொத்துகளை மாற்றியெழுதினால் நல்லது அல்லவா...?" என அபிப்பிராயங் கேட்டனர்.

கிருஸ்டிக்கு வந்ததே கோபம். கொதித்தெழுந்த கோபத்தை வார்த்தைகளாய்க் கொட்டினான்.

"இவ்வளவுதானா நீங்கள் என்மேல் வைத்த நம்பிக்கை" எனக் கத்தினான். தன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு தன் பெற்றோரின் வீட்டுக்குச் சென்றுவிட்டான். சிலைகளாகினர் அந்த வயோதிபத் தம்பதியினர்.

குழந்தையைப் பாராது இருக்கமுடியவில்லை. கிருஸ்டியிடம் சென்று பேசிப் பாரத்தனர். அவன் அவர்களுடன் மீண்டும் சென்று வாழ்வதை மறுத்து, சனிக்கிழமைகளில் கொண்டுவந்து அவர்களிடம் விடுவதாகப் பொருந்தினான். அவ்வாறே, சனிக்கிழமைகளில் காலையிலிருந்து மாலைவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எஸ்தர் அவர்களுடன் விடப்பட்டாள். மாலையில் கிருஸ்டி வந்து அழைத்துச் சென்றுவிடுவான். சில மாதங்களில் இதனையும் நிறுத்திவிட்டபோது மீண்டும் அவனிடம் பேசிப் பார்த்தனர். அவன் மறுத்துவிடவே, சிலரின் அறிவுரையின்படி நீதிமன்றம் சென்று முறையிட்டு வழக்காடினர். இறுதியில் தீர்ப்பு எதுவென்றால், மாதமொரு தடவை ஒரு பொது இடத்தில் குழந்தையைக் கொண்டுவந்து அவர்களிடம் விடவேண்டும். மாலையானதும் அழைத்துச் செல்ல வரும் கிருஸ்டியிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட எமது ஆலயத்தை நீதிபதி ஏற்றுக்கொண்டார். இதன்படி இன்று எஸ்தர் வந்துள்ளாள். மாமா, மாமியாகிய என் கணவரும் நானும்கூட இங்கு வந்தே சந்தித்துக் கொண்டிருக்கிறோம்" என விமலேஸ் கூறிமுடித்த அனைத்துமே என்னை அதிர வைத்தன.

என்ன உலகம் இது...? இதுதான் வாழ்க்கையா...? இந்தச் சிறுமியின் எதிர்காலம் என்னவாகும்...? பெரியவர் பிரச்சினையில் இக் குழந்தைபற்றி எவரும் கவலைப்படவில்லையே...! இறைவா உம்மிடந்தான் நான் கேட்கலாம். பதில் தெரியாத வினாக்கள் மனத்தை உறுத்தின.

"மாமி" எனும் எஸ்தரின் மகிழ்ச்சிக்குரல் கேட்டதும் விமலேஸ், "நான் வாறன், என்னைக் கண்டிட்டாள். வெளியில் ஓடி வாரதுக்கு முதல் நான் போயிரணும். அப்ப நான் வாறன்..."

என்று கூறிவிட்டு ஆலயம் நோக்கி விரைகிறாள். கனத்த இதயத்துடன் நான் வீடு திரும்புகிறேன்.

**- R. மற்றில்டா -**

## தொண்டன் விநியோகஸ்தர்களே!

**தொ**ண்டன் விநியோகத்தில் நீங்கள் அளித்து வரும் ஒத்துழைப்பிற்கு நன்றிகூறுகிறோம். அதே வேளை, நீங்கள் செலுத்தவேண்டிய தொகையை மூன்று மாதங்களுக்குமேல் நிலுவையில் வைக்கா மல் செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ஒரு பிரதியைத் தயாரிக்க 50/= அளவில் நாம் செலவுசெய்யும் அதேவேளை அதை 30/=கே விற் பனைக்கு விடுகிறோம். (எவ்வளவு காலத்திற்கு இது சாத்தியம் என்பது வேறு விடயம்) மாதந் தவறாது பணம் செலுத்தப்பட்டாலும் எம் சுமை கனக்கிறது. இந்நிலையில் ஒழுங்காகப் பணம் செலுத்தப்படாவிட்டால் நிலைமை என்ன என்பதை நாம் சொல்லத்தேவையில்லை. அதேவேளை, பிரதி களை விற்பதில், தருமதிகளை பெற்றுக்கொள்வ தில் உங்களுக்குள்ள சிரமங்களை நாம் அறிவோம். அதனால்தான் மூன்று மாத இடைவெளிகள். அதற் காகப் பொறுப்புகளைப் புறந்தள்ளிவிட முடியாது. ஆகவே, தயவுசெய்து நிலுவைகளைத் தேங்க விடாது உடன் செலுத்தி அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள் கிறோம்.

## வாசகர்களே!

**தொ**ண்டன் உங்களுக்காக வெளிவரும் ஒரு சஞ்சிகை. ஏறத்தாள 45 ஆண்டுகளாக தொண்டன் மாதந்தோறும் உங்களிடம் வருகின்றது. சமய சமூக இலக்கியச் சிந்தனைகள் தகவல்கள் உங்கள் பார்வைக்குத் தரப்படுகின்றன. நீங்கள் அறிந்து கொள்ளவும் வளர்ந்துகொள்ளவும் ஒரு சிறிய முயற்சி. இதுவும் நற்செய்திப் பணியின் தொடர்ச்சி தான். எல்லாமே வணிகமயப்பட்டுப்போயுள்ள வாழ்க்கை முறையில் தொண்டன் வாங்க நீங்கள் செலுத்துவதோ ஒரு துளி! ஆயினும் அதன் பயனோ பெரிது!

கிழக்கில் 45 ஆண்டுகளாக வெளிவரும் ஒரே சஞ்சிகையாகவும், இலங்கையில் கத்தோலிக்க தமிழ்ப் பத்திரிகை உலகில் நீண்டகாலமாக வெளி வரும் இரண்டாவது சஞ்சிகையாகவும் விளங்கும் தொண்டன் சஞ்சிகையின் பயணம் தொடர - சாதனைப் படைக்க - தோள் கொடுக்க வாருங்கள்! வாசியுங்கள்!! எழுதுங்கள்!!!

மறவாதீர்கள் வாசிப்பு மனிதனை முழுமைப்படுத்துகிறது.

- இன்பம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா நாட்டின் பல பாகங்களிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

தரணியெங்கும் சென்று தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துரைத்ததோடு பிறநாட்டு அறிஞர்களும் பல்கலைக் கழகங்களும் தமிழ் மொழியைக் கற்கவும் ஆய்வுகள் செய்யவும் வழி ஏற்படுத்தியவர் தனிநாயகம் அடிகளாவார்.

உலகத் தமிழாய்வு மன்றத்தை நிறுவி, பல நாட்டு அறிஞர்களையும் ஒன்றிணைத்து உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற வழிசமைத்ததோடு அதன் வழியாக, தமிழ் மொழியை நவீன ஆய்வுகளுக்குள் கொண்டுசென்று வளப்படுத்தியவர். இதன் காரணமாக, உலகின் பலநாடுகளிலுமுள்ள பல்கலைக்கழகங்களிலும் தமிழ் மொழி தொடர்பான ஆய்வுகளும் தேடல்களும் வளர்ச்சியடைந்தன.

யாழ்ப்பாணம் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அடிகளார், தமிழ் நாட்டில் மறைபணி ஆற்றியதோடு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் படித்தவர். அத்துடன், மேல்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் பயின்று, உயர் தகைமை பெற்ற பன்மொழிப் புலமையாளர். மேலும் மலேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர். அக்காலத்திலேயே முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு மலேசியாவில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் பல நாடுகளுக்கும் தமிழ்த்தூது சென்று, பல்வேறு ஆய்வுகளைத் தேடல்களைச் செய்த அடிகளார், பல்வேறு இடங்களிலும் பல்கலைக்கழக மட்டத்திலும் சொற்பொழிவுகள், எழுத்துகள் மூலம் தமிழ்மொழியின் சிறப்பை அறியச் செய்ததோடு, தமிழ் உலகம் மறந்துபோன அல்லது அறியாமலிருந்த பழந்தமிழ் நூல்களையும் பிறநாடுகளில் இன்றும் வழக்கத்திலிருக்கும் தமிழரது சமய கலாசார பண்பாட்டு அம்சங்களையும் தமிழ் உலகம் அறியச் செய்தார்.

ஆய்வுகள், உரைகள், வெளியீடுகள், மாநாடுகள், பயணங்கள் என்று பரந்த அளவில் தமிழ்ப்பணி புரிந்த கத்தோலிக்க குருவான தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் தமிழ் மொழிக்கும், தமிழ் மண்ணுக்கும் திருமறைக்கும் பெருமைசேர்த்த பெருமகனாவார்.

சமயங்களாலேயே தமிழ் மொழி வளம்பெற்றது. சமணரும் பௌத்தரும் சைவரும், வைஷ்ணவரும், கிறிஸ்தவரும், இஸ்லாமியரும் ஆற்றிய அரும்பணிகளுக்குத் தமிழ் நூல்களும் இலக்கியங்களும் சான்றுபகர்கின்றன.

அதிலும் தமிழை நவீன ஆய்வுத் தளங்களுக்குள் கொண்டு செல்வதில் கிறிஸ்தவரின் பங்கு கணிசமானது. போப்பையர், பேர்சுவல், வீரமாமுனிவர் போன்றோர் இவர்களில் முன்னோடியாகத் திகழ்கின்றனர். மொழியினால் மதங்கள் இணைந்த போதும், மனங்கள் இணைய முடியாத ஒரு வக்கிரத்தனம் மேலோங்கியிருப்பது துரதிர்ஷ்டவசமானது மட்டுமன்று ....

20ம் பக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கடுகுக் கதை 49




**அ**ன்ரன் தன் வாழ்க்கையில் முதன்முறையாக இடியால் தாக்கப்பட்டவர்போல் நிலைகுலைந்து போயிருந்தார். எல்லாம் அந்த மாரி ரீச்சர் என்றழைக்கப்படும் மாரியக்காவின் வாக்குமூலந்தான் காரணம்.

அன்ரனின் அயல் வீட்டுக்காரர்கள்தான் மாரி ரீச்சரும் சின்னமணியக்காவும். நல்ல குடும்ப நண்பர்கள். மாரி ரீச்சர் வீட்டில் இருந்து சின்னமணியக்கா வீட்டிற்கு சாப்பாடு போகும். 'ஒண்டுக்ககுள்ள ஒண்டு' என்பார்களே அதுதான் இங்கு நடைபெறுவது.

சின்னமணியக்கா சீட்டுப்போடுவதில் வல்லவர். முதலாம் சீட்டு ஆறு இலட்சம் ரூபா. மாரி ரீச்சர் கைமாத்தாக் கேட்டபடியால் அப்படியே கொடுத்துவிட்டார். ஒரு மாதத் தவணை, ஒரு வருடமாகிவிட்டது.

சின்னமணியக்கா இணக்கச் சபைக்கு விசயத்தைப் பாரப்படுத்தினார். அன்ரனும் இணக்கச் சபையில-் ஓர் உறுப்பினர். விசாரணையின்போது மாரி ரீச்சர் சொன்ன வாக்குமூலம்.... "இந்தப் பொம்பிளய எனக்குத் தெரியாது .... இவவ நான் ஒருநாளும் கண்டதில்லை...., பொய் சொல்றாவு...."

அன்ரனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஒரு கோயில் காரியங்களில் ஈடுபடும் பெண்ணா இப்படிச் சொல்வது...?

அன்ரன் முடிவு செய்தார், "இவ்விடயத்தில் நான் விசாரணைக்குழு உறுப்பினராக இருப்பதைவிட சாட்சிக்காரனாக இருப்பதே சரியானது...!"

பற்றி –

**இலக்கிய வீதி .....**

இம்மதங்கள் போதிக்கும் ஆன்மீகத்திற்கே அது முரணானது.

தமிழ் அனைத்து மதத்தவரையும் கவர்ந்த மொழியாக இருப்பது தமிழின் சிறப்பு. ஆகவே, தமிழ்ப் பணியாற்றும் பெருமக்களை பிரதேசம் கடந்து, மதம் கடந்து, இனம் கடந்து, நாடு கடந்து போற்றுவதும், பாராட்டுவதும் என்றும் நன்றியுடன் நினைவு கூருவதும் தமிழ் மக்களின் தவிர்க்க முடியாக் கடனாகும்.

உலக மொழி ஆய்வாளர்களும் அறிஞர்களும் ஆர்வலர்களும் போற்றும் தனிநாயகம் அடிகளாரது நூற்றாண்டு விழா தமிழர் வாழும் இடமெல்லாம் நடைபெறவேண்டும். அதனூடாக ஒற்றுமையும் ஒருமைப்பாடும் புரிந்துணர்வும் மொழிப்பற்றும் ஆர்வமும் நம்மத்தியிலே வளர்ந்திடவேண்டுமென்பதே நம் விருப்பமாகும்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2ம் நாள் அன்னாரின் நூற்றாண்டுப் பெருவிழா யாழ்ப்பாணத்தில் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான முயற்சிகளும் ஆரம்ப நிகழ்வுகளும் தமிழர் வாழும் நிலங்களில் நடைபெற்றுவருகின்றன. மட்டக்களப்புப் பிரதேசத்திலும் இதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

- மலர்வேந்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்னை தெரசாவின் 'அம்மானை' தந்த



## கலைக்கோட்டன் இருதயநாதன் அவர்கள்



ஏறத்தாள கடந்த ஒன்றரை ஆண்டுகளாக 'தொண்டன்' சஞ்சிகையில் 'அன்பின் அரசி அன்னை தெரசாவின் அம்மானை'க் காவியத்தைப் பாடி அளித்தவர் 'கலைக்கோட்டன்' என்ற புனை பெயரையே பட்டமாகவும் பெற்றுக் கொண்ட அ. இருதயநாதன் அவர்கள்.

பாலமீன்மடுவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆசிரியராக பின் அதிபராக பல்வேறு பாடசாலைகளிலும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

மட்டக்களப்பு மாவட்ட சாரணர் ஆணையாளராக ஐந்து வருடங்கள் சேவையாற்றி உள்ள இவர் சாரணர் பணிக்காக ஜனாதிபதி விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

கலை ஆர்வம் மிக்க இவர், கூத்து, மேடை நாடகம், கவிதை, பாடல்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், குறுந்திரைப்படங்கள் என்று பலவற்றை ஆக்கியும் நடித்தும் பங்களித்துமுள்ளார். அவரது பல்வேறு முயற்சிகளையும் பங்களிப்பையும் இச்சிறு குறிப்பில் அடக்கிவிட முடியாது. தம்முடைய கலை ஆற்றலுக்கும் பணி வாழ்வுக்குமாக பல்வேறு விருதுகளையும் கௌரவத்தையும் பெற்றுள்ள இவர் மட்டக்களப்பிற்குப் பெருமை சேர்க்கின்ற கலைஞராவார்.

பல கிறிஸ்தவ நாடகங்களையும் கூத்துகளையும் ஆக்கி அளித்துள்ள இவர், 'தொண்டன்' சஞ்சிகை வழியாக அன்னை தெரசாவின் அம்மானையைப் பாடி அளித்தது. நமது பாராட்டிற்குரியது. அவரது பணிகள் தொடரவேண்டும் என்று வாழ்த்தி நன்றிகூறுகிறோம்.

**நிர்வாகம்**
**- தொண்டன் -**

## தமிழ்த்தூது தனிநாயக அடிகள்
### நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ்



தமிழ்த்தூது தனிநாயக அடிகளின் நூற்றாண்டு விழா உலகெங்கும் தமிழர் வாழும் இடமெல்லாம் கொண்டாடப்பட்டு வருகிறது. தனிநாயகம் அடிகளாரின் தன்னிகரில்லாப் பெரும்பணியை கௌரவிக்கும் வகையில் ஆகஸ்ட் – செப்டம்பர் மாதங்களை இணைத்து தொண்டன் சிறப்பு மலராக மலரவிருக்கிறது.


சிறப்பு மலரைச் சிறப்பிக்க எழுத்தாளர்களிடமிருந்து தரமான படைப்புகளை எதிர்பார்க்கிறோம். அடிகளாரின் வரலாறு, பயணம், பணிகள், ஆய்வு முயற்சிகள், வெளியீடுகள், உரைகள், சுவையான தகவல்கள் மற்றும் இன்னோரன்ன விடயங்களைக் கொண்ட ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

சுருக்கமாக எழுதுங்கள்! சுவையாக எழுதுங்கள்!

ஆக்கங்கள் வந்துசேரவேண்டிய **இறுதித் நாள்: 2013 ஜூலை 15.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நம்பிக்கையாய் இரு!

- மே -

**இவ்வாண்டு நம்பிக்கை ஆண்டாகும். இங்கே தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ள சிந்தனைச் சரங்கள், பரிசுத்த வேதாகமத்திலிருந்தும், புனிதர்கள் மற்றும் ஏனைய இறைபணியாளர்களுடைய நூல்களிலிருந்தும் பொறுக்கி எடுக்கப்பட்டவை.**

**இயேசுவின் திரு இருதயத்தின் மீது நாம் வைக்கவேண்டிய நம்பிக்கையின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும், அதனால் விளையக்கூடிய அதிசயமான பலாபலன்களையும் இச் சிந்தனைகள் உணர்த்துகின்றன.**

**தா**ன் விசுவசித்ததையும், பெறுவதாக நம்பியதையும் ஒருவன் அடையாமலிருப்பது கூடாத காரியம்.

**(புனித மெக்டில்டா)**

**எ**ல்லாவற்றையும் நானே செய்வதற்காகவே இந்தப் பெருந்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தகுதியின்மை, அறிவின்மையின் பாதாளமாகிய உன்னைத் தெரிந்து கொண்டேன். நான் உனது வலிமையாயிருப்பேன். எதற்கும் அஞ்சாதே!

**(திரு இருதயம், புனித மார்க்கரேட் மேரிக்கு)**

**க**டவுளில் வைத்த நம்பிக்கையில் விரிந்திருக்கும் இருதயத்தைக் கொண்டுள்ளவனின் உத்தமதன வளர்ச்சி எத்துணை விரைவாய் இருக்கும்! அவன் ஓடுவது மட்டுமன்று, பறப்பான்.

**(புனித லிகோரியார்)**

**இ**வ்வுலகத்தில் உங்களுக்கு நெருக்கிடை உண்டாகும். ஆயினும், திடமாயிருங்கள். நான் உலகத்தை வென்று விட்டேன்.

**(அரு. 16:33)**

**உ**ன் நம்பிக்கை எவ்வளவு பெரிதாயிருக்க வேண்டுமோ, அவ்வளவு பெரிதாயிருந்தால், உனக்கு என்ன நேரிடுமென்பதைப் பற்றி நீ உன்னையே தொந்தரவு செய்துகொள்ள மாட்டாய். எல்லாவற்றையும் கடவுளின் கையில் வைத்துவிட்டு, உன்னிடம் அவர் எதையாகிலும் விரும்பும்போது, அது என்னவென்று உனக்கு அறிவிப்பார் என்று நம்பிக்கையுடன் இருப்பாய்.

**(முத். கொலம்பியர், சே.ச)**

**உ**ன் ஆன்மாவின் பால் என்னை ஈர்ப்பது எது என்று உனக்குத் தெரியுமா? அது நீ என்னிடம் கொண்டுள்ள குருட்டு விசுவாசமேயாகும். நீ உத்தம தனத்தின் உச்சியை அடைய உன்னையே நம்பியிருந்தால், நீ நத்தை வேகத்தில் தான் சென்றிருப்பாய்: அதற்கு மாறாக, நீ என்னை மட்டும் நம்புவதால், நீ மிக விரைவாய்ப் பறந்து செல்வாய்.

**(இயேசு, சகோதரி கொன்சோலாத்தாவுக்கு...)**

**நீ** விசுவசித்தால், கடவுளின் மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா?

**(அரு 11:40)**

**எட்வெட் தேவதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





# புனிதர்களை அறிவோம்

- மற்றில்டா இராஜேந்திரம் -

## வைகாசி மாதம் – 2013

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 தொழிலாளரின் பாதுகாவலர் புனித ஜோசேப் | 2 புனித அத்தனாசியுஸ் | 3 திருத்தூதர்கள் புனித பிலிப்பும் புனித யாக்கோப்பும் | 4 புனித புளோரன்ஸ் புனித கொதார்ட் |
| 5 புனித சில்வானுஸ் புனித யூடித் | 6 புனித பெனடிற்றா | 7 புனித பிளோவியஸ் முத்திப்பேறு பெற்ற கிசெலி | 8 புனித 4ம் பொனிபஸ் புனித டெசிடரேற்றஸ் | 9 புனித கிறகோரி நாஞ்சி புனித பச்சோமியஸ் | 10 புனித சொலாங்கி | 11 புனித அந்தீமப்பா புனித பிரான்சிஸ் டி கிரோலமோ |
| 12 ஆண்டவரின் விண்ணேற்புப் பெருவிழா புனித நெரேயுஸ் புனித அச்சிலேயுஸ் புனித பங்கிராஸ் | 13 புனித மேர்பி டொமினிற்றா புனித அன்றூகியூபட் போர்கிருட் | 14 திருத்தூதர் புனித மத்தியாஸ் | 15 புனித தோக்வஸ் புனித இசிடோர் புனித டிம்ப்னா | 16 புனித உபால்தப்பர் புனித ஜோன் நெபோமுசென் | 17 புனித பாசல்பேலன் | 18 புனித 1ம் ஜோன் |
| 19 தூய ஆவியார் பெருவிழா புனித நெரேயுஸ் புனித செலஸ்ரின பேதுரு புனித வைவெஸ் | 20 புனித சியன்னா பெர்னாதீன் | 21 புனித ஒஸ்பிசி புனித பின்சேல் கொட்ரிக் | 22 புனித கித்தோரியா புனித கசியாறீட்டா | 23 புனித தெசிதோரி புனித எமிலா புனித ஜோன்பப்டிஸ்ட் ரோசி | 24 புனிதர்கள் டொனேடியன், ரொகாடியன் | 25 புனித 7ம் கிரகறி புனித பெடே புனித மேரி மக்டலின் டி பஸி |
| 26 மூவொரு கடவுள் பெருவிழா புனித பிலிப்நேரி | 27 புனித கன்டபரி அகஸ்ரின் | 28 புனித பொனிபஸ் புனித ஜேர்மானுஸ் | 29 புனித நார்பெத்து புனித டிரியர் மக்ஸிமினுஸ் | 30 புனித தோமஸ் கம்பல் புனித ஜோன் ஒப் ஆர்க் | 31 புனித கன்னி மரியா எலிசபெத்தைச் சந்தித்த விழா | |



இத்தாலியில் உள்ள பைசா கோபுரத்திற்கு இப்போது வயது 700 ஆகும். அது 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோபுரம். அது கட்டிய நாளிலிருந்தே அதன் ஸ்தானத்தில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக சாய்ந்தது. அதாவது மில்லி மீட்டராக சாய்ந்து கொண்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் இரண்டு மில்லி மீட்டர் மேலும் சாய்ந்தது. இப்போது அது கீழே சரியும் ஆபத்தில் உள்ளது. அதை சரிசெய்யும் முயற்சியில் நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# புனிதர் வரலாறு



**வைகாசி - 05** **புனித யூடித்**

இவரைப் புனித யுட்டா எனவும் அழைப்பர். பிரஷ்ய நாட்டின் பாதுகாவலராவார். சங்கெட் ஹவுசன் எனுமிடத்தில் பிறந்து வளர்ந்தார். இவருக்கு இன்னுமொரு பெருமையுண்டு. அதாவது, ஹங்கேரியைச் சேர்ந்த புனிதையான எலிசபெத் வாழ்ந்த சமகாலத்தில் வாழ்ந்தவர் எனும் பெருமையே அது. தனது பதினைந்தாவது வயதில் ஒரு பிரபுவுக்கு வாழ்க்கைப்பட்டார். சிறந்ததோர் மனைவியாகவும், பின்னர் நல்லதொரு தாயாகவும் பிரகாசித்தார். இவரது கணவர் இவரது இரக்கம் மிகுந்த ஆன்மீக வாழ்வுக்கு மிகவும் ஆதரவாயிருந்தார். காலங்கள் கடந்தன. ஒரு தடவை இவரது கணவர் பரிசுத்த பூமியைத் தரிசிக்க யாத்திரை சென்றார். அங்கு இவர் மரணித்தார். இவரது அகால மரணத்தின் பின் தன் குழந்தைகளைத் தன்னந் தனியாக வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பேற்பட்டது. குழந்தைகளோ தமது அன்னையின் அற்புதமான முன்மாதிரிகையைப் பின்பற்றிச் சமய வாழ்வில் முதிர்ச்சியடைந்தவர்களாயினர். தமது அன்னையின் நீண்டகால ஆசையான துறவறத்தை மேற்கொள்ளத் தாம் தடையாயில்லாமல் சுதந்திரமாகச் செயற்பட விட்டனர். தனது சொத்துகளை நோயாளரைப் பராமரிப்பதற்காகச் செலவிட்டார். ஒரு பாழடைந்த கட்டிடத்தைத் தாம் வசிப்பதற்காகத் தெரிந்து கொண்டார். இங்குதான் இவர் அற்புதமான இறையருளையும், ஒரு புனிதராகுவதற்குரிய நிலையினையும் பெற்றுக்கொண்டாரென்றே சொல்ல வேண்டும். இவர் மூன்று வழிகள் தம்மை இறைவனிடம் கொண்டுசெல்லும் என நம்பினார். அவை: வேதனை மிகு நோய், வீட்டை விட்டு வெளியேறி வேறு நாட்டின் அபிவிருத்தியற்ற பகுதிகளுக்குச் செல்லுதல், வறுமையை இறைவனுக்காக ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவையாகும். இவற்றைத் தாமே கடைப்பிடித்து முழுமையாக முன்மாதிரிகை வாழ்வை வாழ்ந்ததால் முடிவில் இறைவனை அடைய இவரால் முடிந்தது. 1260ம் வருடத்தில் இவர் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு வான்வீடு புகுந்தார்.

**வைகாசி - 25** **புனித 7ம் கிரகறி**



ஹில்டர் பிரான்ட் எனும் பெயரையுடைய இவர் இத்தாலியிலுள்ள டஸ்கனியில் பிறந்தார். பின் பிரான்ஸ் நாடு சென்று கிளனி எனும் இடத்திலமைந்த சந்நியாசி இல்லத்தில் இணைந்து கொண்டார். பின் இவர் உரோமாபுரிக்கு வரவழைக்கப்பட்டார். அங்கு இவர் மகிமையடையவும், புனித வாழ்வுபற்றி அறியவும் முடிந்தது. 1073ம் வருடத்தில் இவர் 9ம் லீயோ பாப்பரசருக்கு உதவியாக இருந்து அவரது சமயச் சீர்திருத்த அலுவல்களுக்கு உதவியதன் மூலம் வெற்றிகரமாக அப்பணிகள் முடிவடையச் செய்தார். பாப்பரசர் லீயோவுக்குப் பின் இவர் 7ம் கிரகறி எனும் பெயருடன் பாப்பரசரானார். புனித பொருட்களை விற்று இலாபம் பெறுவதை இல்லாதொழித்தார். புனிதரான முன்னைய பாப்பரசர் லீயோவின் சீர்த்திருத்தங்களைத் தொடர்ந்தும் அமுல்படுத்தினார். துறவறத்தாருக்கான கண்டிப்பற்ற நீதி முறைகளைச் சரிப்படுத்துவதிலும் ......

- 26ம் பக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள்

**இரட்சணிய யாத்திரிகம் தொடர் ...**

இரட்சணிய யாத்திரிக ஆசிரியர் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் முதலான பல்வேறு அணிகளைத் தன் காப்பியத்தில் பயன்படுத்தி யுள்ளார். இது ஒரு முற்றுருவகக் காப்பியமாதலால் உருவக அணி மிக அதிகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

உ+ம்:

காந்தள் மலர் செங்கமலமலரைப் புடைப்பப்
பூந்தண் கருங்குவளைப் போதுநீர் முத்துகுப்பத்
தேந்தளவுதொக்கநறுஞ் சேதாம்பலைஅலர்த்தி
மாந்தண்டலைக் குயிலின் மென்மொழியார்
மாழ்கினார்

(குமாரபருவம்: இரட்சணியசரிதப் படலம்: (317)

இயேசுக் கிறிஸ்து சிலுவையைச் சுமந்து கொண்டு ஜெருசலேம் நகர வீதி வழியே செல்லும் போது அந்நகரத்துப் பெண்கள் துயருற்று அழுத காட்சியினை விபரிக்கும் சந்தர்ப்பத்தினை இச் செய்யுள் விளக்குகின்றது. தங்கள் கைகளால் முகத்தில் அடித் துக் கொண்டும் கண் களிலிருந்து கண்ணீர் பெருகவும் வாய் விட்டழுதபடி அப் பெண்கள் காணப்பட்டார்கள் என்பதைக் குறிப் பிட வந்த புலவர், அவர்களது கை களை காந்தள் மலருக்கும், முகத்தினை செந்தாமரைக்கும், கண்களைக் கருங்கு வளைக்கும், கண்ணீரை முத்துக்கும் உருவகிப்ப தைக் காணலாம்.



பின்வரும் செய்யுள் தற்குறிப்பேற்ற அணிக்கு உதாரணமாகும். இயற்கையாகவே இடம்பெறும் சூரிய அஸ்தமனத்தினை இயேசுக் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் என்பவற்றைக் கண்டு சகிக்கமாட்டாமல் சூரியன் மேற்கில் மறைந்ததாகத் தன் குறிப்புப் புலப்படப் புலவர் இதில் குறிப்பிடுகின்றார்.

பொங்குஅருள் நாதன் பூதலரட்சைபுரிவான் வந்து
அங்கம் வருந்திஆருயிர் நல்கிஅவனிக்குள்
மங்கிஅடங்கக் கண்டுசகிக்கமாட்டான் போல்
வெங்கதிர் உட்கிக் குடகடலிற் குப்புறவீழ்ந்தான்

(குமாரபருவம்: இரட்சணியசரிதப் படலம்: 415)

பழந்தமிழ் இலக்கியக் கருத்துகளையும் தன் காப்பியத்தில் கிருஷ்ணபிள்ளை கையாளத் தவறவில்லை. பின்வருவன இதற்கு உதாரணங்களாகும்.

வருமுன்னர்க்
காவாதார்க்குவாழ்க்கை
எத்துணையவேனும்
எரிமுன்னர்
உற்றவைத்தூறெனக்
கெடும் என்பர்
இன்னல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொருமுன்னர் விலகிஓடிப் புகலிடமாயகோமான்
திருமுன்னர் அடையின் நித்ய ஜீவனைஅடைதல்
திண்ணம்

(ஆதிபருவம்:மெய்யுணர்ச்சிப் படலம்: 36)

குற்றம் வருமுன்னர் அதனைக் காவாதாரது வாழ்க்கை எத்தகையதாயினும் இது நெருப்பின் பக்கத்தே வைக்கப்பட்ட வைக்கோல் போரைப் போல அழிந்துவிடும். அதனால் இன்னல்கள் வந்தடையுமுன்னர் அவற்றிலிருந்து விலகி இயேசுவைச் சரணடைந்தால் நித்திய ஜீவனை அடையலாம் எனக் கூறுகிறார் புலவர். இச் செய்யுளில் குறிப்பிடப்பட்ட முதலிரு வரிகளும்

**வரு முன்னர் காவாதான் வாழ்க்கை எரி முன்னர்**
**வைத்தூறுபோலக் கெடும் (435)**

என்னும் குறட்பாவை அடியொற்றியது.

அதுபோலவே பல செய்யுள்களில் இந்து மதச் செல்வாக்கையும் காணமுடியும். தேவாரம், பாசுரங்கள் முதலானவற்றின் தாக்கத்தினையும் இக்காப்பியத்திற் காணலாம். உதாரணமாக:

மையார் கண்ணிருண்டுசெவிவாயடைத்துக்
குழறி ஐயான்
மூச்சொடுங்கிஉயிராக்கைனவிட்டுஏகிடுநாள்
நையேல் கைநெகிழேன் நானுனைநான்
எண்டுஅஞ்சலென்

(ஆதிபருவம்:உபாதிமலைப்படலம்: தேவாரம்: 5)

மரணாந்தவல்லிருள் மூடிமெய்
வசமற்றுஉயிர் மறுகிக்
கரணங்களும் பொறியாதியுங் கலங்கித்
திகைத்துஅயரும்
தருணங் கிறிஸ்தரசே எனை அஞ்சேல்
எனத் தாங்கு
அரணம் பிறிதிலையேஉனையல்லாற்
கடைக்கணி

(இரட்சணியபருவம்: இகபரசந்திப்படலம்: தேவரம்: 6)

என்னும் இரு செய்யுள்களும்

புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி
அறிவழிந்திட்டைம் லேந்தி
அலமந்தபோதாகஅஞ்சேலென்றருள்செய்வான்

என்னும் திருஞானசம்பந்தரின் தேவாரத்தினை அடியொற்றியிருப்பதைக் காணலாம். தவிரவும் போற்றித் திருவகவல்அமைப்பிலும் பலசெய்யுள்கள் உள்ளன.

உதாரணம்:

முன்னமோர் நரனால்
விளைந்ததீவினையைமுனிந்திடும்
முதல்வனேபோற்றி
பின்னர் அவ் வினைதீர்ந்துஉலகெலாம்
உய்யப் பேரருள் அளித்தவாபோற்றி
நன்னெறி இகந்தோர்
பிரளயத்துஅமிழநயந்திடுநாதனேபோற்றி
மன்னுநோவாவோடுஎண்மரைப் புரந்தமாபெரும்
கருணையாய் போற்றி

(இரட்சணியபருவம்: இகபரசந்திப்படலம்:தேவாரம்
(போற்றித் திருவிருத்தங்கள்)
பூர்வசுருதி : 2)

இவ்வாறு பல்வேறு சிறப்புகளையுடையதாக விளங்கும் இரட்சணிய யாத்திரிகம் கிறிஸ்தவ இலக்கிய வரிசையில் மட்டுமின்றித் தமிழ் இலக்கிய வரிசையிலும் தனித்துவமான சிறப்பினைப் பெற்று விளங்குகின்றது. ■

றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
முதுநிலைவிரிவுரையாளர், மொழித்துறை,கிழக்குப் பல்கலைக்கழகம்.



**- புனிதர் வரலாறு**

...... விசேடமாக ஈடுபட்டார். ஆன்மீகமற்ற ஆட்சியாளரிடமிருந்து திருச்சபையை மீட்டெடுத்தார். 4ம் ஹென்றி எனும் ஜெர்மனியச் சக்கரவர்த்திக்கும் இவருக்கும் ஏற்பட்ட மனக்கசப்பினால் 1084ம் வருடம் உரோமாபுரியைக் கைப்பற்றியதும் பாப்பரசருக்கெதிரான இயக்கத்தை சக்கரவர்த்தி ஆரம்பித்தான். பின்னர் பாப்பரசர் 7ம் கிரகறியை சலெர் நோவாவுக்கு நாடு கடத்தினான். மறுவருடமே இவர் அங்கு மரித்தார். "நான் நீதியை விரும்புகிறேன். பாவத்தை வெறுக் கிறேன்..... ஆகையால் நான் நாடு கடத்தப்பட்டு இறக்கிறேன்" என்பவை இவரது இறுதி வார்த்தைகளாகும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 31.05.2013

பரிசுப் போட்டி

# விவிலியம் கற்போம் – 121

## இணைச்சட்டம் அதிகாரங்கள் 28, 29

(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

மோசே இஸ்ராயேலரிடம் "ஆண்டவரின் கட்டளைகள் அனைத்தையும் கடைப்பிடிப்பதில் கருத்தயிரு. அப்போது அவர் உன்னை உயர்த்துவார். நீ ஆசி பெறுவாய். உனது உடைமைகளும் ஆசி பெறும். உன்னைத் தம் ........................ மக்களினமாக்குவார். ஆனால், ஆண்டவர் குரலுக்குச் செவி கொடாமல் வாழ்ந்தால் சாபங்கள் எல்லாம் உன்மேல் வந்து நிலைக்கும். நீ அழியுமட்டும் உன்னை வதைக்கும். உலகின் ஒருமுனை முதல் மறுமுனை வரையுள்ள எல்லா மக்களிடையேயும் உன்னைக் கடவுள் சிதறடிப்பார். உன் ........................ உனக்குக் கேள்விக்குறியாகும். உன் வாழ்வின்மீது நம்பிக்கை இழந்து இரவும் பகலும் அச்சத்தோடு வாழ்வாய். நீங்கள் இனி ஒருநாளும் மீண்டும் மேற்கொள்ள மாட்டீர்களென எந்தப் பயணத்தைப்பற்றி நான் வாக்களித்திருந்தேனோ அப் பயணத்தை ........................ எகிப்துக்குத் திரும்பிச் செல்லுமாறு ஆண்டவர் செய்வார். ஓரேபில் ஆண்டவர் இஸ்ரயேல் மக்களோடு செய்த உடன்படிக்கையைப் போல மோவாபில் உடன்படிக்கை செய்ய உரைத்த வார்த்தைகள் வருமாறு: ........................ நாட்டில் பார்வோனுக்கும், அவர் அலுவலர் அனைவருக்கும், அவன் நாடு முழுமைக்கும் உங்கள் கண்முன்பாக ஆண்டவர் செய்தவற்றை நீங்கள் கண்டீர்கள். ஆனால், புரிந்துகொள்ளும் உள்ளத்தையும், காணும் கண்களையும் கேட்கிற செவிகளையும் இந்நாள்வரை ஆண்டவர் தரவில்லை. ........................ ஆண்டுகள் உங்களைப் பாலைநிலத்தில் கூட்டிவந்தேன். அப்பொழுது உங்கள் ஆடைகள் நைந்துபோகவில்லை. காலணிகள் பழுதடையவில்லை. நீங்கள் அப்பம் உண்ணவோ, இரசம் குடிக்கவோ, மதுபானம் அருந்தவோ இல்லை. நீங்கள் இங்கு வந்தபோது அரசனான சீகோனும், ........................ அரசனாகிய ஓகும் நமக்கெதிராகப் போர் புரிய வந்தனர். நாம் அவர்களை முறியடித்தோம். அவர்கள் நாட்டைப் பிடித்து ரூபனியருக்கும், காத்தியருக்கும் மனாசேயின் பாதிக் குலத்தாருக்கும் உரிமைச் சொத்தாகக் கொடுத்தோம். எனவே இந்த ........................ கடைப்பிடி. அப்போது நிறைவுபெறுவாய். இன்று நீங்கள் உங்கள் கடவுளின் முன் நிற்கிறீர்கள். வாக்குறுதியுடன் கூடிய இந்த உடன்படிக்கையை உங்களோடு மட்டுமல்லாது இங்கு நம்மோடு நிற்கும் அனைவரோடும் இன்று இங்கு இல்லாதவரோடும் செய்கிறார். வேற்றினத் ........................ பணிபுரியவென விலகிச் சென்ற எவரும் உங்களோடு இல்லாதிருக்கட்டும். அவர்களுக்கு ஆண்டவர் இரக்கம் காட்டமாட்டார். அவர்களது பெயரை மண்ணுலகினின்று துடைத்துவிடுவார். ஆண்டவர் தம் சினத்தில் வேறுத்த சோதோம், கோமோரா, அத்மா, ........................ போன்ற இடங்கள் அழிந்ததைப் போல, இந்நாட்டின் நிலம் காணப்படுகையில் வேற்றினத்தார் கண்டு காரணம் கேட்கையில் மூதாதையர் எகிப்திலிருந்து வரும்போது செய்து கொண்ட உடன்படிக்கையை விட்டுவிலகினர். ஆகவே, ஆண்டவர் ........................ கொண்டு, சாபங்களால் அவர்களை நாட்டிலிருந்து வேறுத்தார் என்று சொல்லப்படும். எனவே, மறைவானவை நம் கடவுளுக்கு உரியவை. வெளிப்படுத்தப்பட்டவையோ இத்திருச்சட்டத்தின் வார்த்தைகளைக் கடைப்பிடிப்பதற்கு நமக்கே உரியவை" என்று கூறினார்.

**விடைகள்:** **பாசானின், உடன்படிக்கையை, தெய்வங்களுக்கு, செபோயிம், சீற்றம், தூய, உயிர், கப்பல்களில், எகிப்து, நாற்பது.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 121

**பரிசுப் போட்டி**




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. 'ஒன்றே உலகம்' எனும் நூலின் ஆசிரியர்
   (சுவாமி விபுலானந்தர் - டாக்டர் மு. வரதராசன் - தவத்திரு தனிநாயகம் அடிகள்)

2. உலகின் மிகப் பெரிய தீவு
   (ஐஸ்லாந்து - கிறீன்லாந்து - நியூபவுன்லாந்து)

3. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள மிகவும் பிரகாசமான கோள்
   (புதன் - வியாழன் - வெள்ளி)

4. சிங்கராஜா காடு உள்ள இடம்
   (மத்திய மாகாணம் - தென் மாகாணம் - சப்பிரகமுவா மாகாணம்)

5. 'தனக்குத் தனக்கெண்டால் ........................'
   (வண்டில் கடக்கு கடக்கெண்டுமாம் - சுளகு படக்குப் படக்கெண்டுமாம்
   கொள்ளி மடக்கு மடக்கெண்டுமாம்)

6. 'தன்துயர்காணாத் தகைசால் பூங்கொடி' இதில் **பூங்கொடி** என்பது
   (உவமைத் தொகை - இருபெயரொட்டுப் பண்புத் தொகை - அன்மொழித்தொகை)

பெயர் : ................................................................................

முகவரி: ................................................................................

................................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**

**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் - 121**
**தொண்டன்**
**அ. பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போட்டி முடிவுகள்



## விவிலியம் கற்போம் - 119 விடைகள்

அடகாக, மிரியாமுக்கு, கதிரவன், பாவம், அந்நியருக்கும், நாட்டில், அமலேக்கு, உரிமைச் சொத்தாக, வானத்தின்

## அறிவை வளர்ப்போம் - 119 விடைகள்

1. 950 மைல்
2. பிரான்ஸ்
3. H.A. கிருஷ்ணபிள்ளை
4. மூன்று
5. பண்பாகு பெயர்
6. சூரிய நமஸ்காரம்

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுவோர்**

- A. லிசாந்தன் ஒலிவர்,
  169/1A, லூட்ஸ் ஒழுங்கை, பார்வீதி,
  மட்டக்களப்பு.
- றொசாலியா சருணிதா
  # 65, திருச்செந்தூர் முருகன்
  கோவில் வீதி, கல்லடி,
  மட்டக்களப்பு.

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்**

- ர. ஜதுஸ்டிக்கா
  இல. 14/6, காளிகோயில் வீதி,
  புன்னைச்சோலை,
  மட்டக்களப்பு.
- கிருஸ்டி பிரசாந்த் கிஷாந்த்,
  பிரதான வீதி,
  மாங்காடு,
  செட்டிபாளையம்.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 71 முடிவுகள்**

**முதலாம் பரிசு - 400/=**
R. நேனுசாந்த்
முனைவீதி,
தம்பிலுவில் - 1.

**இரண்டாம் பரிசு - 300/=**
க. செப்னி,
இல. 345,
அன்புவழிபுரம்,
திருகோணமலை.

**மூன்றாம் பரிசு - 200/=**
சி. ஜேசுதாஸ்,
புனித இலங்கை மாதா
ஆலய வீதி,
தன்னாமுனைக் கொலனி,
தன்னாமுனை.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# காற்றில் கலந்து வரும்....

இலங்கை வானொலி தேசிய சேவையில்

மே - 2013 கத்தோலிக்க நிகழ்ச்சிகள் – தமிழ்

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் - காலை 5.55 மணி**

நாள் : 04, 05, 06, 07, 08, 09, 10,

18, 19, 20, 21, 22, 23, 24.

**புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) - மாலை 7.00 மணி**

நாள் : 12, 26

(இறைவார்த்தை வழிபாடு, வேரைத்தேடி, சிந்தனை உரை, விவிலிய நாடகம், உலகத் திருச்சபைச் செய்திகள், பாடல்கள் இன்னும்...)

**சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) - மாலை 7.00 மணி**

நாள் : 14, 28

(கதையும் கருத்தும், வழிபாடு, பாடல்கள் இன்னும்.....)

---

நிகழ்ச்சித் தொகுப்பு :

மலர்வேந்தன்

தொடர்பு:

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ. எண் – 44,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டன் குடும்பத்தினர்